Registered as a Newspaper பக்கங்கள் 06 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 17 (01-01-94) சனிக்கிழமை ஓசை 317

## புலரும் ஆண்டில் ஆசிப்பது சமாதானமே
### யாழ். ஆயர் புத்தாண்டுச் செய்தி

புலர்ந்திருக்கும் இப்புத்தாண்டில் நாம் அனைவரும் ஆசிப்பது சமாதானமே. உலக சமாதானத்தின் தினத்தில் எமது பரிசுத்த தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் விடுக்கும் செய்தி யாதெனில் ''உலக குடும்ப சமூகத்தின் சமாதானம், எம் ஒவ்வொரு குடும்பத்தில் நிலவும் சமாதானத்தினாலேயே உருவாக்கப்படுகிறது'' என்பதாகும் என யாழ். ஆயர் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார். அச் செய்தி வருமாறு; கிறிஸ்து சகாப்தத்தில் ஒரு புதிய ஆண்டு தொடங்குகிறது. வருடத்தின் முதல்நாள் எமது சிந்தனைகளை தூண்டி எமது வாழ்வை எண்ணிப் பார்க்க அழைக்கிறது. கடந்த வருடம், வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழ் இனத்தவராகிய எமக்கு துன்பங்கள் சூழ்ந்த காலமாக இருந்திருக்கின்றது. போரின் கோர விளைவுகளும் இயற்கையின் அனர்த்தங்களும் எம்மவர்க்கு சொல்லொணாத் துன்பத்தை விளைவித்துள்ளன. இவற்றின் மத்தியிலும் இறைவனின் பராமரிப் (5ஆம் பக்கம் பார்க்க)

# தென் மாகாணசபை ஆளுநரால் கலைப்பு!

## காரணம் கூறவும் மறுப்பு

(கொழும்பு)

**தென்மாகாண சபையை உடன் கலைப்பதற்கான உத்தரவை தென்மாகாண ஆளுநர் கலாநிதி எல். எம். ஜயரத்னா நேற்று பிறப்பித்துள்ளார். இம் மாகாண சபையைக் கலைப்பதற்கான காரணம் என்ன என்பதை தெரிவிக்க அவர் மறுத்துள்ளார். சிறிலங்காவிலுள்ள ஏழுமாகாண சபைகளில் எதிர்க்கட்சிகளின் ஆட்சியிலிருந்த மூன்று மாகாணசபைகளில் தென் மாகாணசபையும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.**

தென்மாகாணஆளும் கட்சியின் உறுப்பினர் பிரான்சிஸ்டு [illegible]ம் தெரியாதோரால் கட[illegible]தப்பட்டதை அடுத்து, மாகாண சபையில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் சமபலம் பெற்றிருந்தது. இதனையடுத்து இவ்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை மாகாண சபையில் நிறைவேற்றுவதற்குத்தேவையான பலத்தை மாகாண ஆளும் கட்சி இழந்தது.

இதேவேளை மாகாண சபையைக் கலைப்பதற்கு முன்னர் இதன் முதலமைச்சர் அமரசிறிதொடங்கொட, எதிர்க்கட்சித் தலைவர் எம் எஸ் அமரசிறி ஆகியோரைக் கலந்தாலோசித்த பின்னரே இம் முடிவு எடுக்கப்பட்டதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## மாகாணசபை கலைப்பு ஒரு சட்டவிரோத செயல்

### முதலமைச்சர் கண்டனம்

[illegible]தன்மாகாணசபைகலைக்[illegible]ட்டமை சட்டவிரோதமான ஒரு செயல் என அம் மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

தென்மாகாண ஆளுநரின் இத் தீர்ப்புக்கண்டு தான் அதிர்ச்சியும்வியப்பும் அடைவதாகவும் இக் கலைப்பு நடவடிக்கைக்கு எதிராக சகல சட்டபூர்வமான முயற்சிகளையும் தான் மேற்கொள்ளப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது ஆளும் ஐக்கியதேசியக் கட்சியின் திட்டமிட்டசெயல் என்றும் அதற்கு மாகாண சபை ஆளுநர் உடந்தையாக இருந்துளளார் என்றும் அவர் கூறினார்.

## ...ண்டு வீச்சில் புலியானோர்

## எறிகணை வீச்சு

பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று இரவு மக்கள் குடியிருப்புகள் மீது எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

(5ஆம் பக்கம் பார்க்க)

## நாட்காட்டி இணைப்பு

1994 ஆம் ஆண்டிற்கான மூவர்ண நாட்காட்டி இன்றைய ஈழநாதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தவறாது பெற்றுக்கொள்ளவும்.

## வாழ்வு சிறக்க வருக வருக

எல்லையில் நின்ற எதிரி ஓட
எங்களின் ஈழம் இங்குமலர
தொல்லை நீக்கிட நீயும்
தொண்ணூற்று நான்கே வருக வருக
அலைகள் மீதும் - எம்
அணிகள் வெல்ல
தலைவன் தலைமையிற்
தமிழ் ஈழம் விடிய
கலைகள் யாவையும் உன்
காலத்தில் வளர
நிலைகள் மாறிட - வந்த
தடைகள் போக்கிட வருக! வருக!

- உடுவில் சசிவர்ணன்

## விமானத் தாக்குதலை நிறுத்துமாறு கோரிக்கை

### அரசாங்க அதிபர் விடுத்தார்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் நடந்த விமானக் குண்டுத் தாக்குதல் குறித்து ஜனாதிபதிடி.பி.விஜேதுங்காவிற்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவிற்கும் யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

குடாநாட்டின் மீது தொடரும் விமானக்குண்டுத் தாக்குதலை உடனடியாக நிறுத்தும்படியும், சாவகச்சேரியில் நடந்த தாக்குதலினால் 8 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் தேவாலயம், பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் பொதுமக்களின்வீடுகள், உடைமைகள் சேதமாக்கப் பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (சி)

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

**ஈழநாதம் வாசகர்கள், விநியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள், அபிமானிகள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

# 1993-புலிகளின் பிரகாசமான ஆண்டு
## சர்வதேச செய்திநிறுவனம் மதிப்பீடு

(கொழும்பு)

இவ் ஆண்டில் ''புலிகள் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டார்கள்.'' ''அதேவேளை சிறிலங்கா படையினர் மிக மோசமான அழிவைச் சந்தித்துள்ளார்கள்'' என ஏ. எவ். பி. செய்தியாளர் தெரிவிக்கிறார்

இவ் ஆண்டு சம்பவங்களை தொகுத்து நோக்கும்போது ''TigerTigerBurning bright'' (புலிகள் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டனர்) என்ற கவிதை அடியை அவர்சுட்டிக்... கள் பல முன்னேற்றங்களையும், வெற்றிகளையும் பெற்ற ஆண்டு.

சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் பல தோல்விகளைச் சந்தித்ததுடன், சிறிலங்காவின் முன்னணித் தலைவர்களான பிரேமதாசாவும், லலித் அத்துலத் முதலியும் திட்டமிட்டு மர்மமான முறையில் கொல்லப்...

இவ் இரு தலைவர்களினதும் மறைவு சிறிலங்காவிற்கு பெரும் இழப்பு என அவதானிகள் கூறுகின்றனர். இவ் இழப்பு சிறிலங்கா தனது தோளில் சுமக்க முடியாத அளவிற்கு பாதித்துள்ளது.

மக்கள் முக்கிய மாற்றம் ஒன்றை எதிர்பார்த்திருந்த வேளையில் லலித் அத்துலத் முதலி கொலை செய்யப்...

## நியமனப்பத்திரங்கள் விரைவில் கோரப்படும்

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

...ள்ளார்.

...ென்மாகாண ஆளுநரின் ... தீர்ப்புக்கண்டு தான் ...ர்ச்சியும்வியப்பும் அடைவ...கவும் இக் கலைப்பு நட... கட்சியின் திட்டமிட்டசெயல் என்றும் அதற்கு மாகாண சபை ஆளுநர் உடந்தையாக இருந்துளளார் என்றும் அவர் கூறினார்.

# ...ண்டு வீச்சில் பலியானோர் 9 ஆக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

...ாவகச்சேரிப் பகுதியில் ...ுமி இருந்த மக்கள் மீது ...ிலங்கா போர் விமானம் ...கொண்ட றொக்கட் ...க்குதலுக்கு இலக்காகி ...யமடைந்து யாழ். ... மருத்துவ மனை ...சை பெற்று வந்த ... தெற்கு மீசாலை ...ர்ந்த சின்னப்பு ...ிளை (வயது 70) ...லை மரணமடைந்...

...டி தாக்குதலுக்கு ...ாகி சிச்சை பெற்று ...னுசாமி என்பவரும் ...ுன்தினம் நள்ளிரவு மரணமடைந்துள்ளார். இவர்கள் இருவரையும் சேர்த்து மொத்தம் 9 பேர் இத்தாக்குதலினால் பலியாகியுள்ளார்கள். (சி)

# நியமனப்பத்திரங்கள் விரைவில் கோரப்படும்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கலைக்கப்பட்ட தென் மாகாண சபையின் தேர்தல் நியமனப் பத்திரங்களை ஒரு வாரகாலத்தில் தாக்கல்செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமென தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா தெரிவித்தார்.

மாகாணசபை சட்டத்தின் கீழ் கலைக்கப்படும் மாகாண சபைக்கு நியமனப்பத்திரங்கள் ஒருவாரகாலத்துள் கோரப்படவேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


# குமுழமுனையில் குண்டு வீச்சு இளம்பெண் பலி; வீடுகள் நாசம்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா விமானப்படையின் புக்காரா விமானம் நடாத்திய அகோரக் குண்டு வீச்சுத்தாக்குதல்களினால் இளம் பெண் ஒருவர் பலியானதுடன் இரு வீடுகளும் தரைமட்டமாகின.

நேற்றுக்காலை 10.15 மணியளவில் மணலாறு மாவட்டத்தில் உள்ள குமுழமுனைக் கிராமத்தை வட்டமிட்ட புக்காரா குண்டு வீச்சு விமானம் ஒன்று அடுத்தடுத்து நான்கு குண்டுகளை வீசின.

இதன்போது மொறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்தவரும குமுழமுனையில் வசித்தவருமான திருச்செல்வம் சற்குதானந்தி (வயது 17) கோரமான முறையில் பலியானார். அத்துடன் இரண்டு வீடுகளும் முற்றாகச் சேதமடைந்தன.



சாவகச்சேரி நவீன சந்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் சிறிலங்கா விமானப்படை ...ானங்கள் நடாத்திய றொக்கட் தாக்குதலில் ஸ்தலத்தில் கொல்லப்பட்ட நான்கு பொது ...களின் சடலங்களை மேலே படத்தில் காணலாம்.

...கிறார்

இவ் ஆண்டு சம்பவங்களை தொகுத்து நோக்கும்போது ''TigerTigerBurning bright'' (புலிகள் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டனர்) என்ற கவிதை அடியை அவர்சுட்டிக் காட்டினார். விடுதலைப்புலி விடுதலைப்புலிகளிடம் பல தோல்விகளைச் சந்தித்ததுடன், சிறிலங்காவின் முன்னணித் தலைவர்களான பிரேமதாசாவும், லலித் அத்துலத்முதலியும் திட்டமிட்டு மர்மமான முறையில் கொல்லப்பட்டனர்.

... தோளில் சுமக்க முடியாத அளவிற்கு பாதித்துள்ளது.

மக்கள் முக்கிய மாற்றம் ஒன்றை எதிர்பார்த்திருந்த வேளையில் லலித் அத்துலத் முதலி கொலை செய்யப்

(5ஆம் பக்கம் பார்க்க)

# இ.தொ.காவிலிருந்துபிரியும் இளைஞர் புலிகளுடன் இணைய வாய்ப்பு

## பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இ. தொ காவில் ஏற்பட்டு வரும் பிளவினால் தோட்டத் தொழிலாளர் அதிருப்தியடைந்துள்ளனர் இதனால் தீவிரவாத கொள்கையுடைய மலையக இளைஞர்கள் விடுதலைப்புலிகளுடன் இணையக்கூடிய வாய்ப்பு உள்ளது என பி. பி. ஸி. யின் செய்தியாளர் லூசியன்ராஜகருணா தெரிவித்தார்.

தற்போது இ. தொ. கா. இரண்டாக பிளவுறும் நிலை இருப்பினும்அதுவே மூன்றாக பிளவுற்று மூன்றாவது அணி இளைஞர் அணியாக இருப்பின் அது வடக்கு-கிழக்கிலுள்ள போராட்டச் சக்திகளுடன் இணைந்து ஏற்படுத்தக்கூடிய விளைவு குறித்து தெற்கு மக்களை சிந்திக்க வைத்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் தொண்டமானின் பலத்தைத் தெரியாது செல்

(5ஆம் பக்கம் பார்க்க)

# தொழிற்சங்கபணத்தைகையாடியதாக தொண்டமான் மீது குற்றச்சாட்டு

## செல்லச்சாமி சுமத்துகிறார்

(கொழும்பு)

தொழிற் சங்கத்தின் 40 இலட்சம் ரூபா பணத்தை இ.தொ.கா. தலைவர் செள. தொண்டமான் கையாடல் செய்துள்ளதாக கட்சியின் செயலாளர் செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனவரி மாதம் இ. தொ. காவின் தலைவர் தொண்டமான் கூட்டவுள்ள பொதுச் சபைக் கூட்டத்தில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை எனவும் கட்சியின் பொதுச்சபை கூட்டத்தை கூட்டும் அதிகாரம் பொதுச்செயலாளருக்கே உண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

இக்குற்றச் சாட்டுகள் முரண்பாடுகளால் இ. தொ. காவில் பிளவு அதிகரித்துச் செல்வதை காட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தென்னாசியா விலேயே மிகப்பெரிய தொழிற் சங்கமான இ. தொ. காவில் இவ்வாறான பணக்கையாடல் குற்றச் சாட்டு தலைவர் மீது சுமத்தப்பட்டுள்ளமை,

(5ஆம் பக்கம் பார்க்க)

# ஓய்வுபெறும் ராணுவத் தளபதி சிசில் ஜனாதிபதியைச் சந்தித்தார்

(கொழுப்பு)

தனது பதவியிலிருந்து ஓய்வுபெறும் இராணுவத் தளபதி லெப் ஜெனரல சிசில் வைத்தியரட்ன நேற்று மாலை ஜனாதிபதி விஜேதுங்காவை சந்தித்தார். ஓய்வு பெறுவதற்கு முன்பாக நடைபெற்ற இச் சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக தான் நடத்திய போரில் தமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில பிரச்சினைகளையும் கவனித்துவந்ததால் புலிகளுக்கு எதிரான போரில் திறம்பட தம்மால் செயற்பட முடியாது போய்விட்டது என முன்னாள் இராணுவத்தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்தியரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுதமதுபதவியிலிருந்து ஓய்வு பெறும் லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ன தனது பிரியாவிடை உரையின்போது இவ்வாறு குறிப்பிட்டார். அவர்மேலும் தனதுஉரையின் போது தமக்கு பின் பதவிஏற்கும் புதிய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெரிடி சில்வாவிற்கு துருப்புகள் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் கோரினார்.

இதனிடையே புதிய இராணுவத் தளபதியாக லெப்-ஜெனரல் ஜெரிடி சில்வா

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அரசாங்க, தமிழீழ விடுமுறை நாட்கள் அடங்கிய படக் கலண்டர்கள் ரூபா 6/-க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்துபெற்றுக்கொள்ளலாம். மற்றும் பெரிய, நடுத்தரக் கலண்டர்களுக்கும் ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஸ்ரீகாந்தா அச்சகலேன், யாழ்ப்பாணம். (7065)

## கடிகாரங்களா? றேடியோவா?

நல்ல நிலையில் உள்ள கடிகாரங்கள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். விற்கப்படும். சகல கடிகாரங்கள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் (Dilka Watch & Radio Works) ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) கிளை- கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-8129)

## சாயி பாபா பொக்கற் கலண்டர்'94

பாபாவின் பல்வேறு படங்கள் பொக்கற் கலண்டராக வெளிவந்துள்ளன. மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்குமிடம்; பகவான் மருந்தகம் 221, நாவலர்வீதி யாழ்ப்பாணம். (சி-8234)

## அவதூறு வழக்குகள் மீளப்பெறப்பட்டன

(சென்னை)

அரசியல் வாதிகளுக்கு எதிராகவும், பத்திரிகைகளுக்கு எதிராகவும் தமிழக அரசு பல்வேறு நீதிமன்றங்களிலும் தாக்கல் செய்திருந்த சுமார் நூற்றியைம்பதுக்கும் அதிகமான அவதூறு வழக்குகளை தமிழக அரசு நேற்று முன்தினம் விலக்கிக் கொண்டுள்ளது.

## திருமண சேவை

பொருத்தமான மணமகன்/மணமகள் எம்மிடம் உண்டு தொடர்பு; மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். (7069)

## வெளி வந்துவிட்டது

சச்சி மாஸ்ரரின் 39 கட்டுரைகளடங்கிய ''மாணவர் கட்டுரை மலர்'' 5-ம் ஆண்டு புலமைப் பரீட்சை, 6-ம்,7-ம் ஆண்டு மாணவர்களுக்கும் சிறந்தது விற்பனையாளர்களுக்கு கழிவுண்டு. யாழ் புத்தக நிலையம் புதிய பதி நிலைய அருகாமை 413, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (7088)

## ''றட்ணக்குலம்ஸ்''

யாவருக்கும்எமதுபுதுவருட வாழ்த்துக்கள் வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு 31-12-93 க்கு முன் எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்தவைகளை 31-1-94க்கு முன் ரசீதைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளவும் 31-1-94 க்குப் பின் அவற்றை மீளப் பெற முடியாதென்பதை அன்புடனும் வேதனையுடனும் தெரியப்படுத்துகின்றோம்- நன்றி 'றட்ணக்குலம்ஸ்' இல10, கச்சேரி நல்லூர்வீதி, சுண்டிக்குளி. யாழ்ப்பாணம்- (7098)

## தவறிவிட்டது

கணேசரத்தினம் பிரியதர்சினி ஆகியவரின் கைச்சங்கிலி 6-12-93 அன்று திருஞானசம்பந்தர் வித்தியாசாலை வட்டுக்கோட்டையிலிருந்து பரீட்சை முடிந்து வரும்போது தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்து தருபவர்கட்கு சன்மானம் வழங்கப்படும். நிரந்தர விலாசம் செட்டிகுறிச்சி, சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு. (7100)

30-12-93 அன்று சாவகச்சேரி துர்க்கையம்மன் கோவிலடிக்கும், கல்வயல் சைவப் பிரகாசா வித்தியாசாலைக்கும் இடையில் ஆண்கள் அணியும் மூக்குக்கண்ணாடி தவறவிடப்பட்டுவிட்டது கண்டெடுத்தவர்கள் ராணிஸ்ரோர்ஸ் மடத்தடிச் சந்தி, மட்டுவிலில் ஒப்படைக்கவும் (7092)

## 'அகிலன்ஸ்''

O/L வகுப்பில் சித்திர பாடம் சித்தியடைந்த மாணவர்கள் வர்த்தகச் சித்திரம் பயிலத் தேவை. உழைத்து மேல் வகுப்புப் படிக்கலாம். பழகும்போதும்சிறுசம்பளம் உண்டு. எழுத்தோவியர் ''அகிலன்ஸ்'', 426, கண்டி வீதி, அரியாலை. (7096)

## பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம் TASTE LINE INDUSTRIES (PVT) TDL, 14, Seenier Lane, Jaffna. (சி-8249)

## யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்

(யூனிவேர்சல், கந்தர்மடம்)

### ஆண்டு 6 - அனுமதி 1994

எமது பாடசாலையில் 1993 - 12 - 03 ஆம் திகதியிலிருந்து ஆண்டு 6 இற்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன. அனுமதி பெறவுள்ளவர்கள் பாடசாலையில் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்

(7097)

## வளமுடன் வாழ வானவில்லின்

# புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

தேசத்தை மீட்க நிற்கும்
வீரமறவர் நெஞ்சங்களின்
இன்னல்கள் தாங்கிடவே
அண்ணனவன் வழிநின்று

# 1-ம் ஆண்டு நினைவுநாள்



பிறப்பு:
2?-03-1973

வீரச்சாவு:
01-01-1993

## லெப். வெள்ளைத்தேவன்

### கனகசபை (கட்சன்) ஜெயதாசன்

விசேட வேவுப்பிரிவு

அனைத் துலகும் வியக்கும் புலி மறவர் அணிவீரா
வினைத்திறனால் தமிழ்மண்ணின் துயர்நீக்கச் சென்றீர்
சின வேங்கை எனப்பாய்ந்து செயற்கரிய செய்தீர்
மனத்தினிலே தமிழ்ஈழ மலர்வினையே வளர்த்தீர்
மான வேங்கை வெள்ளைத்தேவன் உன்னரிய தோழர்
பூநகரி விறலுடனே தொடர்ந்திடுவார் காண்பீர்.

ஓம் சாந்தி!

01-01-94 இன்று போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் யாவரையும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓடக்கரை வீதி,
சங்கானை.

அப்பா, அம்மா,
சகோதரர்கள், மச்சாள்.

(7087)

# 5-ம்ஆண்டுநினைவலைகள்



தவப்பேறு:
17 - 11 - 1940

சிவப்பேறு:
27 - 12 - 1988

திதி
01 - 01 - 94

அமரர் திரு.

## முத்தையா இராசசிங்கம்

(முன்னாள் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியரும், முன்னாள் நவாலி முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும்)

# பதவி வெற்றிடம்

பதவி — வடிசாலை முகாமையாளர்

சம்பளத்திட்டம் — $\frac{48000 - 72000}{4 \times 1800 \quad 7 \times 2400}$

கல்வித் தகைமை — இரசாயனத்தைஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர், அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் 15 வருடங்கள் அனுபவம் பெற்றவர்.

வயது — 25 — 50 வருடம்.

குறிப்பு:-

அ. சம்பளத்துடன் கூட்டுறவு ஊழியர்களுக்கான சகல அலவன்ஸ்களும் வழங்கப்படும்.

ஆ. கேட்கப்பட்ட கல்வித் தகைமைகள் இருந்தும் அனுபவம்இல்லாது இருப்பின் அல்லது கேட்கப்பட்ட அனுபவம் இருந்தும்கல்வித்தகைமைஇல்லாது இருப்பினும் பொருத்தமான சம்பளத்திட்டத்தில் அமர்த்தப்படும்.

இ பொறுப்புகளுக்கு ஏற்ற வகையில் பிணைப் பணம் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ''பொதுமுகாமையாளர், தென்மராட்சி, பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி'' என்ற விலாசத்திற்கு 10 01 94க்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். கடிதமேலுறையில் பதவிக்குரிய பெயர் இடப்படல் வேண்டும்

தலைவர்
தென்மராட்சி,
ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி,
பருத்தித்துறை வீதி,
வரணி.

(7091)

# நினைவு கூருகின்றோம்...

## 1994.01.01

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய,

❋ சுதா (ஆறுமுகத்தான் குடியிருப்பு-மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

❋ தட்சணா (சோமசுந்தரம் தட்சணாமூர்த்தி - ஆறுமுகத்தான் குடியிருப்பு - மட்டக்களப்பு)

வவுனியா - வீமன்கல் பகுதியில் சிறிலங்கா ஊர் காவற்படையினராற் படுகொலை செய்யப்பட்ட தமிழ் விவசாயி.

1986ஆம் ஆண்டு மட்டக்களப்பு - கொடுவாமடுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற் கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

❋ மனோ (கே. மனோகரன் - ஏறாவூர் - மட்டக்களப்பு)

1987ஆம் ஆண்டு மன்னார் - நாச்சிக்குடாப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் எமைப்பிரிந்த,

❋ ரவீந்திரன் (நாவாந்துறை - யாழ்ப்பாணம்)

1989ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

காண்டீபன் (அப்புத்துரை கருணாகரன்-சுழிபுரம் - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - காக்கைதீவுச் சந்தியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட

நிறைவுறுவோம்—இப்புத்தாண்டில்.

**தமிழீழ மக்கள் அனைவருக்கும் வானவில்லின் மனமார்ந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.**

தரம், சுவை, சுத்தம் நிறைந்த குளிர்களி, குளிர்பான சிற்றுண்டி வகைகளையும் பாண், பஞ்சுமிட்டாஸ், பால்மா வகை, பிஸ்கற் வகைகளையும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# வானவில் குளிர்பான நிலையம்

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8263)

## வாடிக்கையாளரே கவலையை விடுங்கள்

முதல் தரமான ஆட்டிறைச்சி வேண்டுமா நாடவேண்டிய இடம்

ஐந்து சந்தி, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.

வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் திறக்கப்படும்

இல. இரண்டு

# ஆட்டிறைச்சி கடை

வாடிக்கையாளர் மற்றும் அனைவருக்கும்

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

உரித்தாகுக

(7102)

---

ஊழியரும், முன்னாள் நவாலி முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும்)

அன்பு மிகு அப்பாவே
அணையா குலவிளக்கே
ஊர் விட்டு ஊர் சடந்து
உமை அழித்தானோ எமகாதகன்
அப்பா அப்பா என்றழைக்க
நல்வினை செய்திடுவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்

தங்கள் நினைவால் நித்தமும் துயருறும் குடும்பத்தினர்

நவாலி வடக்கு,
மானிப்பாய்

(சி-8241)

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 29-06-.967

தாயக மண்ணில்: 10-01-1993

## செல்வன் ஐயாத்துரை முரளி

திதி: 01-01-1994

''ரெலோ'' தேச விரோதிகளால் சுடப்பட்டு நான்காண்டுகள் ஆறா வேதனையில் துன்பப்பட்டு, நீ பிரிந்து சென்று ஓராண்டு மறைந்தாலும் உன் அன்பு முகம் மறையவில்லை. எங்கள் முரளியே! எப்போது எனி உன்னைக் காண்போம் என்றும் உன் நினைவலைகள் எம்மை விட்டகலாது.

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

அம்மா,
சகோதர சகோதரிகள்'
உறவினர், நண்பர்கள்.

அம்மன் கோவிலடி,
டச்றோட்,
கோப்பாய் தெற்கு.

(7054)

---

யப்படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட,

நாட்டுப்பற்றாளரான,

**குணரத்தினம் விஜயகுமார்** (விஜி) (ஆனைக்கோட்டை - யாழ்ப்பாணம்)

1990ஆம் ஆண்டு மன்னார் - முசல்குத்திப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**மேஜர் அகத்தியர்** (செல்லத்துரை புவனோஜராஜ் - கோட்டைக்கல்லாறு - மட்டக்களப்பு)

**கப்டன் முரளி** (பெரியதம்பி பிரேம்குமார் - 4-ம் கட்டை, பூநகரி - கிளிநொச்சி)

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலையில், எமது முகாமொன்றில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**பூபதி** (செல்லையா நடேசன் - கந்தளாய் - திருக்கோணமலை)

அம்பாறையில் முஸ்லிம் காடையர்களினால் வெட்டிக் கொல்லப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த 2 தமிழர்கள்,

1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு - சந்திவெளித் திடலிலிருந்து முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் குடும்பிமலைப் பகுதியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய.

**நவா/உமைபாலன்** (முத்துப்பிள்ளை ஜீவன்- வாழைச்சேனை- மட்டக்களப்பு)

**சூரி** (பரராசசிங்கம் காளிக்குட்டி - வாகரை மட்டக்களப்பு)

**மகேஷ் - சுபாஷ்குமார்** (சினித்தம்பி நித்தியானந்தன் காளிகோயில் வீதி- கிரான் மட்டு)

இதேதினத்தில் இருபது தினங்களுள் திருக்கோணமலை - கிண்ணியா இடம்பெயர்ந்தோர் முகாமிலிருந்து காணாமற்போன 10க்கும் மேற்பட்ட தமிழர்கள்

1993ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்றுவரும்போது எமைப்பிரிந்த,

**லெப். வெள்ளைத்தேவன்** (கனகசபை கட்சன் ஜெயதாசன் - சந்தைவீதி, சங்கானை- யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

* இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8251)

# தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எலக்ரோனிக்துறையில் தொழில் வாய்ப்புப் பெறக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படுகின்றன.

★ **றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்**

சகல இன றேடியோ ரெலிவிசன், வீடியோ டெக் தொழிற்படும் முறைகள் பழுதுகள் திருத்தப்படும் முறைகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம் : 8 மாதம்

★ **றீவைன்டிங்**

டைனமோ, ரான்ஸ்போமர், மோட்டர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்,

காலம் : 5 மாதம்

★ **மோட்ட பைசிக்கிள் மெக்கானிசம்**

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்ட பைசிக்கிள் திருத்தப்படும் முறைகள் விளக்கமாகப் பயிற்சியளிக்கப்படும்.

காலம் : 4 மாதம்

**பயிற்சிகள் ஆரம்பம் : 05-01-94 (கிழமை நாட்கள்)**

**சனி, ஞாயிறு வகுப்பு : 09-01-94**

விபரங்களிற்கு:

**JAFFNA Technical Institute**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி) (சி-8206)

---

எமது வாடிக்கையாளப் பெருமக்களுக்கு

புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது உற்பத்திப் பொருட்களான

ஊறுகாய் வகைகளான உள்ளி, பாவற்காய், தேசிக்காய் மற்றும் வெங்காயச் சட்னி, அச்சாறு, மாங்காய் சட்னியுடன் சோஸ் வகைகளான தக்காளி, மிளகாய், உள்ளி, வெங்காயம், மாங்காய் என்பவற்றையும் பதப்படுத்திய பலாப்பழத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும்

இல, 215, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரியில் அமைந்துள்ள PAPER MERCHANTS இல் பெற்றுக் கொள்ளலாம்.

**TASTE LINE INDUSTRIES (PVT) LTD.**

14, Seeiner Lane, Jaffna.

(சி-8248)

---

# இசைப் பயிற்சி வகுப்புக்கள்

ஓகன் - ORGAN

கிற்றார் - GUITAR

தபேலா - THABELA

ஆகிய வகுப்புக்கள் சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறும்

**ஆரம்பம்: 09-01-94**

விபரங்களிற்கு:

***JAFFNA TECHNICAL INSTITUTE***

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(றயில்வே கடவை அருகாமை)

(சி-8205)

---

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்

**நத்தார் - புதுவருட பொங்கல் வாழ்த்துக்களை**

தெரிவித்துக் கொள்கிறோம்



உங்கள் கண்களுக்கும் முக அமைப்புகளுக்கும் ஏற்ற மூக்குக் கண்ணாடிகளை தாமதம் எதுவும் இன்றிப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட சேவையில் இன்றும்

# மொறாயஸ்

50, மணிக்கூட்டு வீதி,

(வெலிங்டன் தியேட்டர் முன்பாக)

யாழ்ப்பாணம்.

(சி-8250)

---

# பதவி வெற்றிடம்

**பதவி: கொத்தணி பொதுமுகாமையாளர்**

கல்வித் தகைமை: இரசாயனத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானப் பட்டதாரி அல்லது வடிசாலை அல்லது அதற்கு ஒப்பான ஸ்தாபனத்தில் உற்பத்திப் பணிகளில் 15 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது உற்பத்தி நிலையமொன்றில்முகாமையாளராக கடமையாற்றிய அனுபவம் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

போட்டி அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும்.

சம்பளம்: 4000 - 150 X 4 - 200 X 7 - 6000/-

இத்துடன் கூட்டுறவுச் சேவையாளருக்குரிய மேலதிகப்படிகளும் வழங்கப்படும்-

வயது; 25 - 50 வருடங்கள்

குறிப்பு: கேட்கப்பட்ட கல்வித்தகைமைகள் இருந்தும் அனுபவம் இல்லாது இருப்பின் அல்லது கேட்கப்பட்ட அனுபவம் இருந்தும் கல்வித்தகைமை இல்லாது இருப்பினும் பொருத்தமான சம்பளத்திட்டத்தில் அமர்த்தப்படுவர்:

பொறுப்புகளுக்கேற்ற வகையில் பிணைப் பணம் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் "பொதுமுகாமையாளர், தென்மராட்சி, பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி" என்ற விலாசத்திற்கு 10-01-94 க்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித இடது பக்க மேலுறையில் பதவிக்குரிய பெயரை எழுதப்படல் வேண்டும்.

தலைவர்
தென்மராட்சி,
ப. தெ. வ, அ. கூ. ச. கொத்தணி
பருத்தித்துறை வீதி, வரணி

30-12-93 (7090)

---

# அறிவித்தல்

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம் அவர்கள் அறிவுறுத்தலின் பிரகாரம் 1967 - 1968 காலபோக நெற்செய்கை விவசாயக் கடன் தொடக்கம் 1978 சிறுபோக நெற்செய்கைக் கடன் வரை தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்ற கடனாளிகள் மீதியாகவுள்ள கடன் தொகையை 31-03-94க்கு முன் முழுதாகச் செலுத்தினால் எவ்வித வட்டியும் அறவிடப்படமாட்டாது. ஆகவே கடன் மீதியாக செலுத்த வேண்டியவர்கள் தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு 31-03-94 -க்கு முன் கடனை மட்டும் செலுத்தவும். செலுத்தும் பட்சத்தில் வருங்காலத்தில் வழங்கப்படும் விவசாயக் கடன்களைப்பெற உரித்துடையவர்களாகிறீர்கள் என்பதை சங்க பொது முகாமையாளர் அறியத்தருகின்றார்.

பொது முகாமையாளர்
தென்மராட்சி கிழக்கு
ப. நோ. கூ. சங்கம்
கொடிகாமம்.

(8426)

---

பொற் காலம் தனை நாடி

எங்கி நிற்கும் எம்மிடத்தில்



பொற் காலம் தனை நாடி
ஏங்கி நிற்கும் எம்மிடத்தில்
தேங்கி நிற்கும் துயர் நீங்க
பொங்கி வரும் இப் புத்தாண்டில்
எதிர் கால விடிவிற்காய்
ஏற்ற முடன் உழைப்போமென
உறுதி செய்வோம்;



# எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

**மின்வளம்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**எழிலகம்**
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்:

**சுவையருவி**
மின்நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**படமாடம்**
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

**சுவையருவி**
பேருந்து நிலையம்,
நெல்லியடி.

**நீர்நிதி**
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**இன்சுவை**
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

**சுவையருவி**
பாணகம்,
நாவாந்துறை.

**மலிவகம்**
பாசையூர்.

**இரும்பு விற்பனை அகம்**
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

**மலிவகம்**
நாவாந்துறை.

**பசுஞ்சோலை**
மின்நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8262)

## விக்ரேஸ்

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த பூநகரிச்சமர் ஒளிவீச்சு மற்றும் புதிய சினிமாப் படங்களை எந் நேரமும் பெற்றுக் கொள்ளலாம். சனி, ஞாயிறு தினங்களில் எமது ஸ்தாபனம் திறந்திருக்கும்.

இல. 100, ஸ்ரான்லி வீதி,
(அர்ச்சுனா வீதி)
யாழ்ப்பாணம்.

(சி8256)



ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாராவின்

உணவுப்பார்சல்களை (மீன், மரக்கறி, இறைச்சி) தினமும் காலை 11.45 முதல் பிற்பகல் 3.30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.

(சி-8187)


## மரக்கறிகள் விலையுயர்வு

(தொல்புரம்)

அண்மைக்காலமாக தொடர்ந்து பெய்துவரும் பெருமழையினால் மரக்கறித் தோட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்து சந்தைகளில் மரக்கறி விலை தற்போது அதிகரித்துள்ளது.

ஒரு கிலோபயிற்றங்காய்70 ரூபாவாகவும், வெண்டிக்காய் 45 ரூபாவாகவும், கத்தரிக்காய் 60 ரூபாவாகவும், தக்காளிப்பழம்80ரூபாவாகவும், கரணைக்கிழங்கு 20 ரூபா முதல் 24 வரையும் சந்தைகளில் விற்கப்படுகிறது வெங்காயம், பச்சைமிளகாய் போன்றவற்றிலும் விலை அதிகரித்து காணப்படுகிறது. இதேவேளை வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 6 ரூபா முதல் 9 ரூபா வரை விற்கப்படுகிறது. (41)


லொறி உரிமையாளர்களுக்கு!

## லொறி வாடகைக் கூலிக்கான கேள்விப் பத்திரம்

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம், சங்கானை தனது 1994-ம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடும் களஞ்சியங்களிருந்து பொருட்களை ஏற்றியிறக்குவதற்கு லொறிச்சொந்தக் காரரிடமிருந்து வாடகைக் கூலிக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் 07-01-1994-ம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளரிடம் சேரல் வேண்டும்.

| | |
|---|---|
| சங்கானை | — குருநகர் அரசகளஞ்சியம் |
| யாழ்ப்பாணம் | — குருநகர் அரசகளஞ்சியம் |
| சங்கானை | — யாழ்ப்பாணம் (மனோகராச்சந்தி) |
| சங்கானை | — கோண்டாவில் புகையிரத நிலையம் |
| யாழ்ப்பாணம் | — கோண்டாவில் புகையிரத நிலையம் |
| சங்கானை | — பருத்தித்துறை துறைமுகம் |
| சங்கானை | — சாவகச்சேரி சந்தி |
| யாழ்ப்பாணம் | — சாவகச்சேரி சந்தி |

வாடகைக்கான கூலி கிலோ மீற்றரில் குறிப்பிடப் படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
சங்கானை.

(சி-8260)



எமது வாடிக்கையாளருக்கும் பாவனையாளர்களுக்கும் அனைவருக்கும் எங்களின் புதுவருட நல்வாழ்த்துக்கள்

பாவியுங்கள்!

## பல்லாயிரக் கணக்கான மக்களின் அபிமானத்தைப் பெற்ற றோயல் தயாரிப்புகள் இதோ!

| | |
|---|---|
| றோயல் பேக்கிங் பவுடர் | றோயல் குளுக்கோஸ் “டீ” |
| றோயல் அறாட் பவுடர் | றோயல் கோண்பிளவர் |
| றோயல் கஸ்ரட் பவுடர் | றோயல் றோஸ் டெல்க்கம் பவுடர் |
| றோயல் ஜெலடின் | தீபா றோஸ் டெல்க்கம் பவுடர் |
| றோயல் கொக்கோப்பவுடர் | ரெமிக்குறா டெல்க்கம் பவுடர் |
| றோயல் ஜெலி கிறிஸ்டல்ஸ் | றோயல் நீலம் |

மற்றும் பல

தயாரித்து விற்பனை செய்வோர்:

## றோயல் இன்டஸ்ரீஸ்

22 1/1, ஆதமலி பில்டிங்,
ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு -13

தொலைபேசி இல-326679

கிளை- றோயல் இன்டஸ்ரீஸ் பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை.

கடந்த வருடம் எமது வியாபாரத்திற்கு உதவிகள் பல நல்கிய விற்பனையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்

நன்றி!

(7044)



## பாடசாலை மாணவர்களுக்கு

### ஓர் அரிய சந்தர்ப்பம்!

மலரப்போகும் புத்தாண்டிலிருந்து சொகுசு இருக்கை வசதிகளுடன் கூடிய “டோயாட்டா கோஸ்ரர்” பஸ்வண்டி ஒன்று மல்லாகத்தில் இருந்து வேம்படி மகளிர் பாடசாலைச் சந்தி, யாழ். நகர் வரை பாடசாலைச் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளது.

பயணம் செய்ய விரும்புவோர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

(:) மது புத்தகசாலை
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.

(:) பவித்திரா பான்வலி ஹவுஸ்
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.

(:) நித்தியா ஸ்பொட்
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

(:)சிக்கோ காட்வெயர்
கே.கே.எஸ்.வீதி,
தாவடிச்சந்தி.

(:) தாசன் ஸ்ருடியோ
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

(சி-8225)

22 1/1, ஆதமலி பில்டிங்,
ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு -13 தொலைபேசி இல-326679

கிளை- றோயல் இன்டஸ்றீஸ் பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை.

கடந்த வருடம் எமது வியாபாரத்திற்கு உதவிகள் பல நல்கிய விற்பனையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்

நன்றி!

(7044)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

(:) மது புத்தகசாலை
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.

(:) பவித்திரா பான்ஸி ஹவுஸ்
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.

(:) நித்தியா ஸ்பொட்
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

(:)சீக்கோ காட்வெயர்
கே.கே.எஸ்.வீதி,
தாவடிச்சந்தி.

(:) தாசன் ஸ்ருடியோ
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

(சி-8225)

# லலிதா பிடவை மாளிகை

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

தங்களின்

★ திருமண வைபவங்களுக்கு ஏற்ற ★

## கூறைத் தினிசுகள்

காஞ்சிபுரம், செந்தூரப்பூ, பெனாரஸ்
மைசூர் சில்க்ஸ், பட்டுவேட்டிகள்

மற்றும்

பலவகை சாறிகளுக்கும், வெளிநாட்டில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட

சூட்டிங், சேட்டிங்

கண்ணைக் கவரும் றெடிமேட் ஸ்கேட் & பிளவுஸ்
மாட்டின் சேட், கிப்ஸ் சாரம் முதலானவற்றுக்கு

இன்றே நாடுங்கள்

யாழ்நகரின் முன்னணி நிறுவனம்

## லலிதா பிடவை மாளிகை

5 - 6 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி-8258)

## கூடு விட்டுப் பறந்த குயில்



## செல்வி இளவேணி அதிருபசிங்கம்

வல்வை

தாய் மடியில்
03-05-1970

வான் வெளியில்
10-08-1993

மங்கலங்கள்
நன்கலங்கள்
எங்கடமை
நின்கடமை

பலபுரிந்து
பலவுடனே
நினைக்கேதான்
முடிந்ததென்று

மனைபுகுத்தி
நனிசிறக்க
ஏதொன்றும்
நமைநீத்துப்

வாழவைத்து
வைக்க வென்றோம்
இயற்றவில்லை
பறந்தாயோ

நின்காலடிகளில் இன்றும் எம் கண்ணீர்ப்பூக்கள்

அன்புத்தம்பி ஆதவன் மற்றும் ஐயா,
அம்மா, அக்கா, தம்பி ஆசுகன்

(7031)

நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்



### சிந்தனைக்கு

அரைமணி நேரத்தை அற்பமாகக் கருதுவதை விடவும் அந்த அரைமணி நேரத்தில் மிக அற்புதமான காரியத்தை செய்து கொண்டிருப்பதே மேலானது.

யொஹன் கேத்தெ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

## 1994ஐ உறுதியுடன் எதிர்கொள்வோம்!

தமிழீழ விடுதலைப் போரில் பல சாதனைக்கு இடங் கொடுத்த 1993 ஆம் ஆண்டு நேற்றுடன் விடைபெற, 1994 ஆம் ஆண்டுக்குள் தமிழீழ மக்கள் இன்று பிரவேசிக்கின்றார்கள். கடந்த மூன்றரை வருட இரண்டாம் கட்ட ஈழப்போர், அதிலும் குறிப்பாக 1993 ஆம் ஆண்டு இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு ஒன்று எட்டப்பட முடியாதது என சிறிலங்கா அரசிற்கு தெளிவாக வலியுறுத்திய ஆண்டாக அமைந்தது.

இருப்பினும், சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளும், அதன் ஜனாதிபதியின் அணுகுமுறைகளும் அவர்கள் பாடம் கற்கத் தயாராக இல்லை என்பதையே காட்டுவதாக உள்ளது. அவர்களின்சொல்லும், செயலும் இராணுவத் தீர்வு பற்றியதாகவே இருக்கின்றது. இந்நிலையில், 1994 ஆம் ஆண்டும் ஒரு சமாதானத்திற்குரிய அமைதியான ஆண்டாக இருக்கப்போவதில்லை என்றே கூறலாம்.

இதேவேளை, சிறிலங்காவைப் பொறுத்து, அரசியல் வார்த்தைகளில் கூறுவதானால் ஒரு 'தேர்தல் ஆண்டு' என்றே கூறவேண்டும். அரசியலமைப்பின் சாதாரண சரத்துக்களின்படி நடப்பதானால், இவ்வாண்டில், பாராளுமன்றத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் இன்றைய நிலையில் தென் மாகாண சபைக்கான தேர்தலும், சில வேளை மேலும் பல மாகாண சபைத் தேர்தல்களையும் சிறிலங்கா சந்திக்க வேண்டிவரும்.

இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமோ அன்றி டி. பி. விஜேதுங்கவோ 1993 இல் சந்தித்த பெரும் தோல்விகளுடன் தேர்தலை எதிர்கொள்ளப் போவதில்லை. இராணுவ வெற்றி ஒன்றை ஈட்டிக் கொள்வது அரசின் முக்கிய குறிக்கோளாகும். இந்நிலையில், பெரும் தாக்குதல்களுக்கு அரசாங்கம் இராணுவத்தை உற்சாகப்படுத்தி, நிர்ப்பந்திக்கவும் கூடும். இதேவேளை, இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்படவேண்டும் என்ற குரல்கள் கடந்த வருடத்தின் (1993) இறுதியில் கேட்கப்படினும், டி. பி விஜேதுங்கவின் தீவிர பௌத்த - சிங்கள அடிப்படை வாதமானது சமாதானத்திற்கான எந்த வழி முறையையும் அனுமதிக்கப்போவதில்லை என்பதைக் காட்டுவதாகவே உள்ளது.

# 1993 உலகின் முக்கிய நிகழ்வுகள்

ஜன 06 : பம்பாயில் இந்து முஸ்லிம் கலவரம் 400 பேர் பலி

ஜன 09 : குஜராத்தில் கலவரம் 24பேர்பலி; 68 பேர் காயம்

ஜன 13 : ஈராக் மீது அமெரிக்க, இங்கிலாந்து போர் விமானங்கள் தாக்குதல்

ஜன 22 : கேணல் கிட்டுவின் மரணத்திற்குகாரணமாக இருந்த இந்தியாவைக் கண்டித்து அவுஸ்திரேலியாவில் தமிழர் ஆர்ப்பாட்டம்

ஜன 23 ; தமிழகத்தில் கேணல் கிட்டு உட்பட 10 போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தி சுவரொட்டி; மூன்றுஇடங்களில் குண்டுவெடிப்பு; விழுப்புரத்தில் காந்தி சிலை தகர்ப்பு

மேற்கு ஐரோப்பிய நகரங்களிலும் லண்டனிலும் இந்திய எதிர்ப்பு ஊர்வலங்கள்

ஜன 27 : 'தடா' சட்டத்தின் கீழ் நெடுமாறன் கைது

பெப் 26 : நியூயோர்க் வர்த்தக மைய 110 மாடி கட்டடத்தில்கார்குண்டு வெடிப்பு; 7 பேர் பலி; 600 பேர் காயம்

மார்ச் 10 : காங்கிரஸ் - அ. தி. மு. க. உறவு முறிவு

மார்ச் 12 : பம்பாய் கேந்திர நிலையங்களில் தொடர் குண்டுவெடிப்பு 300 பேர் பலி; 1000 பேர் காயம்

மார்ச் 16 : கல்கத்தாவில் பாரிய குண்டு வெடிப்பு; 70 பேர் பலி; 200 பேர் காயம்

ஏப் 09 : சந்தனக் கடத்தற் காரன்வீரப்பனின் கண்ணிவெடிக்குப் பொலிசார் உட்பட 22 பேர்பலி

ஏப் 15 : பொஸ்னியா மீது சேர்பியர் ஷெல் தாக்குதல் 56 பேர் பலி; 70 பேர் காயம்

ஏப் 18 : ஜேர்மனியில் தமிழர் அகதிமுகாம் மீது தாக்குதல்

மே 03 : மணிப்பூரில் இந்து முஸ்லிம் கலவரம்; 100 பேர் பலி

மே 15 : ஆப்கான் மோதலில் 500பேர் பலி 2500 பேர் காயம்

மே 29 : ஐ. நா. சபையில் எரித்திரியாவுக்கு அங்கத்துவம்

ஜூன் 04 : சத்தியசாயி பாபாவை கொல்ல முயற்சி சம்பவத்தில் ஆறுபேர் பலி

ஜூன் 13 : சோமாலியாவில் ஐ. நா. அமைதிப்படையை வெளியேறுமாறு மக்கள் நடத்திய பேரணிமீது ஐ. நா படை தாக்குதல்; 20 பொதுமக்கள் பலி

ஜூன் 16 : இந்திய பிரதமர் நரசிம்மராவ் தன்னிடம் ஒரு கோடி ரூபா லஞ்சம் பெற்றதாக பம்பாய் பங்குச் சந்தை மோசடியில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஹர்சத்மேத்தா அறிவிப்பு

ஜூன் 27 : ஈராக் தலைநகர் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்; 8 பேர் பலி

ஜூலை 18 : காவேரி நீரை திறந்துவிடுமாறு கோரி ஜெயலலிதா சாகும்வரை உண்ணா விரதம்

ஜூலை 23 : கறுப்பு ஜூலையை முன்னிட்டு லண்டனில் ஆர்ப்பாட்டம்

ஜூலை 24 : ஐ. நா. அலுவலகம் முன்ஈழத் தமிழர் ஆர்ப்பாட்டம்

ஜூலை 28 : இந்தியப் பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி

ஆகஸ்ட் 08 : சென்னை ஆர் எஸ் எஸ் அலுவலகம் தகர்ப்பு; 9 பேர் பலி

ஆகஸ்ட்15 : தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் விடுதலைப் புலிகளையும் ஆதரிப்பதென பேர்லின் அனைத்துலக தமிழ் மாநாடு தீர்மானம்

செப் 06 : சோமாலியாவில் 6 அமைதிப்படை பலி; 7 பேர் காயம்

செப் 11 : புதுடில்லி இளைஞர் காங்கிரஸ்செயலகம் அருகே குண்டு வெடிப்பு 8 பேர் பலி; 35 பேர் காயம்

செப் 13 ; இஸ்ரேல் - பி எல்.ஓ.ஒப்பந்தம் கைச்சாத்து

செப் 30 ; மகராஷ்ராவில் பூகம்பம்; 35ஆயிரம் பேர் பலி

அக் 15 ; ஹர்சத்பால்பள்ளிவாசல் முற்றுகை

அக் 16 ; நெல்சன் மன்டேலா, டி இளார்க்கிற்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு

நவம் 07 : கிருபானந்தவாரியார்மாரடைப்பால் மரணம்

நவம் 10 : தமிழகத்தில் வெள்ளத்தால் 25 பேர் பலி

டிசெ : 8 தென்னாபிரிக்காவில் இடைக்காலநிர்வாகம் பொறுப்பேற்பு

டிசெ : 12 ரஷ்யதேர்தல்

டிசெ : 26 திருச்சி மாநாட்டில் போட்டித் தி மு க செயலாளராக வை. கோபாலசாமி தெரிவு

டிசெ ; 29 தஞ்சை மாநாட்டில் தி மு கவிலிருந்துவை.கோபாலசாமி வெளியேற்றப்பட்டதற்கு ஆதரவு

(நேற்றைய வாரமலரில், தமிழீழம், சிறிலங்கா தொடர்பான முக்கிய நிகழ்வுகள் வெளிவந்திருந்தன.)

மட்டக்களப்பில்

## பொதுமக்களுக்கு சொந்தமான 400 வீடுகளில் படையினர் முகாம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்களுக்கு சொந்தமான நானூறு வீடுகளை படையினர் தமது முகாம்களாக கொண்டுள்ளனர். அந்த வீடுகளுக்கு சொந்தமானவர்கள் அகதி முகாம்களிலும் பிறரது வீடுகளில் அகதிகளாகவும் வாழ்ந்து பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர், 299 வீடுகளில் இராணுவத்தினரும் 101 வீடுகளில் பொலிசாரும் முகாமிட்டு உள்ளனர். துப்பாக்கி முனையில் பலவந்தமாக மக்கள் விரட்டப்பட்ட வீடுகளிலேயே படையினர் முகாம்கள் அமைத்து இருப்பதாகவும், இவ்வாறு வீடுகளை இழந்தோருக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாலம் அமைக்கும் பணியில் பொது நிர்வாகம் ஈடுபாடு

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் நாற்பது அடி நீளமான போக்குவரத்துப் பாலம் அமைக்கும் பணியில் பொது நிர்வாகத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பெருமழை காரணமாகச் சிதைந்து போன பல்லவராயன் கட்டு வீதியிலேயே இப்பாலம் கட்டும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இளையவன், வதனன் ஆகியோர் தலைமையில் பாலம் கட்டும் வேலைகள் நடைபெறுகின்றன. அப்பகுதியைச் சேர்ந்த மக்களும், தொழிலாளர்களும் இரவுபகலாக பாலம் கட்டும் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாலம் பூர்த்தியாகும் பட்சத்தில் மன்னாருக்கும் கிளிநொச்சிக்குமான போக்குவரத்துகள் மேற்கொள்ளப்படுவதோடு நோயாளரை அவசர சிகிச்சையின் பொருட்டு மடுவைத்தியசாலையிலிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் சிரமங்களும் தீர்க்கப்படும்.

## தி. மு. க. பேரவைத் தலைவர் யார்? போட்டி அணிகள் இழுபறி

(சென்னை)

தி. மு. கவின் சட்டப் பேரவைத் தலைவர் ஏ. செல்வராஜ் கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். கட்சியின் பொதுச் செயலர் அன்பழகன் இது குறித்து பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவிடம் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இதனிடையே செல்வராஜ் தான் தி. மு. கவின் ஒரே அதிகாரபூர்வ உறுப்பினராக தொடர்ந்து இருப்பார் என போட்டி தி. மு கவின் பொதுச் செயலர் வை. கோபாலசாமி சபாநாயகருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். சட்டப் பேரவையில் செல்வராஜ் தி மு க. உறுப்பினராக நீடிக்கிறாரா இல்லையா என்ற தனது முடிவை அவரிடம் உரிய விளக்கம் கேட்டறிந்த பின் அறிவிப்பதாக சேடப்பட்டி முத்தையா தெரிவித்துள்ளார்.

### இ. தொ. கா

லச்சாமி செயல்படுகிறார். செல்லச்சாமி நினைப்பதைப் போன்றோ, அல்லது ஐக்கிய தேசியக்கட்சி நினைப்பது போன்றோ நிலமை அமையாது.

தொண்டமானின் பலத்தை அறிந்தபோதும் அதனைக் கருத்திற்கொள்ளாது மிதவாதச் சிங்களத் தலைமை செயற்படுகிறது. இவ்வாறு செயற்படுவதன் பெருமை டி. பி. விஜேதுங்கவையே சாரும் இவ் அசாத்

### 1993-புலிகளின்

பட்டார். அதாவது மக்களின் சுதந்திரம் பேணப்பட வேண்டும், வடக்கு கிழக்கு யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும் என மக்கள்விரும்பிய வேளையில், அவர் கொல்லப்பட்டார். இவ் இரு விடயங்களுக்கும் தலைமை தாங்கக் கூடியவர் என சிங்கள மக்கள் பலரால் இவர் எதிர்பார்க்கப் பட்டார்.

இதேவேளைசிறிலங்காவை வழிநடத்திச் சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாச அடுத்த சில தினங்களில் கொல்லப்பட்டமை சிங்கள மக்களிடையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

இதேவேளை பிரேமதாசா

### எறிகணை

நேற்று இரவு பத்து மணிக்கும் நள்ளிரவு 12 மணிக்கும் இவ் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இவ் எறிகணைகள் ஏழாலை, குப்பிளான், அளவெட்டி பகுதிகளில்வீழ்ந்து வெடித்த போதிலும் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை.

களை மேற்கொண்டுள்ளனர் முதலாவதாக வெலிஓயாவிலும் பின்னர் பூநகரியிலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களினால் 800க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்

(1993) [illegible] கவின் தீவிர பௌத்த - சிங்கள அடிப்படை வாதமானது சமாதானத்திற்கான எந்த வழி முறையையும் அனுசுப்போவதில்லை என்பதைக் காட்டுவதாகவே உள்ளது.

வடக்கு - கிழக்கு பகுதியில் யுத்தத்தின் சாயலே தென்படும் வேளையில், தென்னிலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல்கள் எவ்வாறான அரசியற் சூழ்நிலையில், நடைபெறும் என்பது குறித்துப் பலமான கேள்விகளே உள்ளன. ஏனெனில், தற்பொழுதே டி. பி. விஜேதுங்க அரசாங்கம் தனது ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பலமான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் முனைப்பாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இதற்கு முன்னுதாரணமாக தென், மத்திய மாகாண சபைகளின் மாகாணசபை உறுப்பினர்கள் கடத்தப்பட்டுள்ளமையும் அதைத் தொடர்ந்து உருவாகிய அரசியல் நெருக்கடி / இழுபறி நிலையைப் பயன்படுத்தி தென் மாகாணசபையை கலைத்துள்ளமையையும் கொள்ளலாம். அத்தோடு இது தொடர்பாக உருவாகிய அரசியல் நெருக்கடியை ஒடுக்குவதற்கு அவசர கால விதிகளை அரசாங்கம் பயன்படுத்த முற்பட்டதையும் குறிப்பிடலாம்.

மேலும், சிறிலங்காவின் தேர்தல் களமும் கடந்த சில தேர்தல் களம் போன்று இருக்கப் போவதில்லை புதிய தேர்தல் கூட்டுக்களும், மாற்றங்களும் உருவாகக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. இன்றுள்ள அரசியல் சூழ்நிலையே பெரும் மாற்றங்கள் இன்றிச் செல்லுமாகில் - அரசியல் சூழ்நிலைகளில் திடீர் மாற்றங்கள் சர்வசாதாரணம் - மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் உருவாகக் கூடிய அரசியல் நெருக்கடிகள் பெரும் இனக் கலவரங்களாக வெடிக்கக் கூடிய சூழ்நிலைகள் உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இந்நிலையில், 1994 ஆம் ஆண்டில், இலங்கைத் தீவில் அமைதி, சமாதானம் என்பதை உருவாவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முன்முயற்சிகள் எதையும் எடுக்கப் போவதோ அன்றி ஊக்குவிக்கப் போவதோ இல்லை என்று துணிந்து கூறலாம். இதன் காரணமாக, தமிழீழ மக்களும் தமது சுதந்திரத்திற்குமானதும், பாதுகாப்பிற்குமான தமிழீழ போராட்டத்தை தொடர்ந்து உறுதியுடன் பற்றிநிற்பதே ஒரேவழி. அதேவேளை, கடந்த மூன்றரையாண்டுப் போரில் விடுதலைப் புலிகள் சாதித்துள்ள பெரும் சாதனைகள் தமிழீழப் போராட்டத்தை எவரும் இராணுவ ரீதியாக வெற்றி கொண்டுவிட முடியாது என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்களுக்குக் கொடுத்திருக்கும் என்பதிலும் சந்தேகம் இல்லை. இந்நிலையில், 1994-ம் ஆண்டை எமது விடுதலைப் போருக்கு மேலும் உறுதியும், பலமும் சேர்க்கும் ஆண்டாக எதிர்கொள்வோமாக!

இளையவன், வதனன் ஆகியோர் தலைமையில் பாலம் கட்டும் வேலைகள் நடைபெறுகின்றன. அப்பகு

கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் சிரமங்களும் தீர்க்கப்படும்.

செயற்படுகிறது. இவ்வாறு செயற்படுவதன் பெருமை டி. பி. விஜேதுங்கவையே சாரும் இவ் அசாத்தியத் துணிச்சலுக்குச் செல்லச்சாமியே காரணம் என லூசியன் ராஜகருணா தெரிவித்தார்

டையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

இதேவேளை பிரேமதாசாவின் மரணத்தைத் தொடர்ந்து ஐக்கியதேசியக்கட்சியின் தலைமை பலவீனமடைந்ததுடன் கருத்து வேற்றுமைகளும், பிளவுகளும் அதிகரிக்கத் தொடங்கின.

பத்து ஆண்டுகால யுத்தம் தீவிரமடைந்தது. இந்த 1993 ஆம் ஆண்டு பெரும் மனித அழிவுகளைச் சந்தித்தது. யுத்தம் மிகக்கொடூரமான முறையில் திரும்பியுள்ளது.

விடுதலைப்புலிகள் இரண்டு முக்கிய பெரும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களினால் 800க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். 500க்கு அதிகமானோர் காயமடைந்தனர். விடுதலைப் புலிகளை ஒடுக்கவென இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் புலிகளால் முறியடிக்கப்பட்டது. இதிலிருந்து விடுதலைப் புலிகளின் பலம் கடந்த ஆண்டைவிட அதிகரித்துள்ளமையை ஒத்துக்கொள்ள வேண்டியுள்ளது என ஆண்டுக் கண்ணோட்டத்தில் ஏ. எவ். பி செய்தியாளர் மேலும் குறிப்பிடுகிறார்.

## பால் கொள்வனவு நிலையம் வடமராட்சியில் திறக்கப்படும்

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் கால்நடை வளர்ப்போரின் நன்மைகருதி பால் கொள்வனவு விற்பனவு நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இப்பால் கொள்வனவு விற்பனவு நிலையத்தில் கால்நடை வளர்ப்போர் பால்விற்பனையை மேற்கொள்ளவும், பாலை நுகர்வோர் அதனைக் கொள்வனவு செய்யவும் வசதிகள் செய்யப்படும் என்றும் வடமராட்சிக் கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு ச. தணிகாசலம் தெரிவித்தார். இக் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு அருகாமையில் பிரதி சனிக்கிழமைகள் தோறும் நடாத்தி வரும் "கால்நடைச் சந்தை" யினால் கால்நடை வளர்ப்போரும், கால்நடை நுகர்வோரும் பல நன்மைகளைப் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது (25)

### தற்கொலை

இளம் யுவதி ஒருவர் கழுத்தில் சுருக் கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது

ஊரெழுவைச் சேர்ந்த பிரேமலதா (வயது 17) என்பவரே கழுத்தில் சேலையால் சுருக்கிட்டு தற்கொலை செய்ய முயற்சித்ததாகவும் இதன் போது இவர் பெற்றோரால் மீட்கப்பட்டு யாழ் போதனாவைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டபோது அங்கு மரணமானார். (சி)

### கலந்துரையாடல்

வலிகாமம் வடக்கு பகுதியைச் சேர்ந்த இடம் பெயர்ந்தோருக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள வீமன்காமம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பொதுமக்கள், மற்றும் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், இடம் பெயர்ந்த பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரை தவறாது சமுகம் தரும்படி வலிகாமம் வடக்கு புனர்வாழ்வு கழகம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

### இரண்டாமிடம் பெற்றார்

அகில இலங்கை ரீதியில் இலங்கை விஞ்ஞானக் கழகம் நடாத்திய "அன்றாட வாழ்வில் விஞ்ஞானம்" பற்றிய கட்டுரைப்போட்டியில் பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி வாணி பாலேந்திரன் இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சாதனை நிலை நாட்டிப் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். இதற்கான பரிசில் கடந்த 7ஆம்திகதி (7-12-93) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இலங்கை விஞ்ஞானக் கழகத்தின் 49 ஆவது வருடாந்த மகாநாட்டில் வழங்கப்பட்டது (25)

### தையல் பயிற்சி ஆரம்பம்

சுய தொழில் வேலைவாய்ப்பைஊக்குவிக்கு முகமாக சுழிபுரம் பண்ணாகத்தில் இலவச தையல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவினால்ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி நிலையத்தில் இடம் பெயர்ந்துவாழும் யுவதிகளும் ஏனையோரும் தையல் கலையை பயின்று வருகின்றனர்.

### புலரும்

...யும் அருட்கொடைகளையும் நினைக்காமல் இருக்க முடியாது. புலர்ந்திருக்கும் இப்புத்தாண்டில் நாம் அனைவரும் ஆசிப்பது சமாதானமே உலக சமாதானத்தின் தினத்தில் எமது பரிசுத்த தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் விடுக்கும் செய்தி யாதெனில் "உலக குடும்ப சமூகத்தின் சமாதானம், எம் ஒவ்வொருவரது குடும்பத்தில் நிலவும் சமாதானத்தினாலேயே உருவாக்கப்படுகிறது" என்பதாகும். எனவே இவ்வாண்டு குடும்பங்களுக்கென சிறப்பாக ஒதுக்கப்பட்ட ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அன்புறவினிலும், ஒற்றுமையிலும் அமைந்த குடும்ப வாழ்வுதான் உலக சமூகத்தின் அமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. உலக நாடுகளின் அமைதி குலைகின்ற பொழுது முதன் முதலில் பாதிப்புக்கு உள்ளாவது தனிக்குடும்பங்களே. தற்பொழுது நடைபெறும் போரினால் குடும்பங்கள் சிதைந்து அழிவதைக் கண்ணுறுகிறோம்.

அதேவேளையில் குடும்பங்கள் தமது பாரம்பரிய விழுமியங்களை பேணி வாழ்வதன் மூலம் சமாதானத்தின் தூதுவர்களாகவும் செயலாற்றலாம் எனவும் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். பெற்றோர்களும், பிள்ளைகளும் எம்மவர் மத்தியிலே சாந்தியின் கருவிகளாக செயல்பட இறைவன் துணைபுரிவாராக.

### தொழிற்சங்க

இ. தொ. காவின் பிளவை பெரும்பாலும் உறுதி செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 29 - 12 - 1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11782

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

24-4491, 26-7663. 24-0917, 26-9992, 41-9579
24-4465, 26-9145, 24-4707, 41-6177, 42-1293
26-4393, 43-6007, 24-8631, 27-8515, 26-4898
26-1285, 41-8686, 24-7375, 27-3927, 27-2004
27-6063, 42-2355, 24-7992, 42-3267, 42-2317
27-2016, 24-6431, 26-5760, 24-4992, 22-7862
27-2020, 24-4323, 26-6335, 42-5080

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-7627, 26-6026, 26-1326, 27-9756, 26-3582
37-6769.

### 30 - 12 - 1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11792

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம் இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-0763, 24-5734, 24-9549, 26-3068, 26-5474
27-7993, 28-1020, 41-2659, 28-2361-

### 31-12-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 11797

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

27-8959, 26-1791.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

24-5241, 26-1169, 40-2249, 24-3258, 26-5725,
42-0999, 26-9626, 26-6568, 40-6979, 26-3763,
22-0777.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்

## உதயம்
## நிழற்படக் கலையகம்

வழங்கும்

## புதுவருட வாழ்த்துக்கள்

நீண்டகால அனுபவம் வாய்ந்தவர்களால் கறுப்பு வெள்ளைப் படங்கள் உடனுக்குடன் கழுவிக் கொடுக்கப்படும்.

கலர்ப் படங்களும் எடுத்துக் கொடுக்கப்படும்.

**உதயம் ஸ்ரூடியோ**

68, அருச்சுனா வீதி (ஸ்ரான்லி றோட்),
யாழ்ப்பாணம்.

(7109)

---

தமிழீழ விடுதலைப் புலிகளின்
நிதர்சனம் நிறுவனத்தின்

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

எமது வானொலியை, நாள்தோறும் கேட்கும் நேயர்களுக்கும், எம்மால் மாதம் தோறும் வெளியாகும் ஒளிவீச்சு எனும் வீடியோ சஞ்சிகையை பார்த்துப் பயன்பெறும் ஆர்வலர்களுக்கும், விமர்சித்து வளர்ச்சிக்கு உதவும் ஆதரவாளர்களுக்கும் மேலும் எமக்கு ஆக்கபூர்வமான உதவிகளைச் செய்வோருக்கும், ஊக்கம் தருவோருக்கும்

எமது இதயம் கனிந்த

**புத்தாண்டு வாழ்த்துக்களைத்**
தெரிவித்துக்கொள்கின்றோம

| | |
|---|---|
| திருநெல்வேலி | நிதர்சனம் |
| யாழ்ப்பாணம். | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| தமிழீழம். | (சி-8265) |

---

அனைவருக்கும் எமது

**புத்தாண்டு வாழ்த்துக்களைத்**
தெரிவித்துக் கொள்கின்றோம்

## அறிவித்தல்

### 01. உழவு இயந்திரம் தேவை

நல்ல நிலையில் உள்ள நாலுசில்லு உழவு இயந்திரத்தை விற்பனை செய்ய விரும்பும் உரிமையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### 02. இழுவைப்பெட்டி

நாலு சில்லு உழவு இயந்திரத்துடன் இழுக்கக் கூடிய இழுவைப்பெட்டி தேவை. உரிமையாளரிடம் விண்ணப்பம் கோருகின்றோம்.

---

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

இன்று உதயமாகும் புத்தாண்டு 1994 சமாதான ஆண்டாக மலர வேண்டுமெனவும் எம்மக்களின் சுதந்திரத்திற்கும், சுபிட்சத்திற்கும் விடிவாக திகழ வேண்டுமென வாழ்த்தி, வரவேற்று எமது வர்த்தக சங்கத்தின் சார்பில் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**யாழ். வர்த்தகர் சங்கம்**

(7106)

---

மாணவர்களுக்கு
ஓர்
புத்தாண்டுப் பரிசு

## எடிசன் அக்கடமியின்

புதிய கிளை நிறுவனம்
கொக்குவில் இந்துக் கல்லூரி
அருகாமையில் ஆரம்பமாகின்றது.

## ஆண்டு 4 முதல் O/L வரை

யாழ். பிரபல ஆசிரியர் குழுவின்
இணைந்த சேவை

**புதிய எடிசன் அக்கடமி**
(கொக்குவில் இந்து அருகில்)
27, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

ஆரம்பம்:
**06-01-1994 பி. ப. 4-00 மணி**

(சி-8266)

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக் கூட்டம்

அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

திகதி: 22 - 01 - 94
நேரம்: காலை 9. 30
இடம்: குமாரசாமி மண்டபம்

பிரேரணைகள் அனுப்புவதற்கும், சாதாரண அங்கத்தவர்களுடைய சந்தாப்பணம் செலுத்துவதற்கும், மதிய உணவுக்கான 50|- செலுத்துவதற்கான இறுதித் திகதி 14 - 01 - 94 ஆகும்.

தனிப்பட்ட அழைப்பிதழ்கள் பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

**பாலசுப்பிரமணியம் தவபாலன்**

---

## மீனவர்களுக்கு உதவி

(வடமராட்சி)

கடற்புலிகள் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மீனவர்களுக்கு மீன்பிடி ஊக்குவிப்புத் திட்டங்களைச் செய்து வருகிறது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 4ஆம் திகதி வடமராட்சி கிழக்கில் மாமுனையில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கவுள்ளது.

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியில் 12 மீனவர்களுக்கு மீன் வியாபாரம் செய்வதற்காக தலா 5 ஆயிரம் ரூபா வீதம் நாளை வழங்கவுள்ளது. இப்பணம் ஆதி கோவிலடி ஆலயத்தில் வைத்து வழங்கப்படும். இத்திட்டங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கே வழங்கப்படும்.

(யோ)

## பிரயாண ஒழுங்கு

வன்னி மாவட்டக் கல்விக் கழக ஆசிரியர்களுக்கான பிரயாண ஒழுங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ள விருப்பதால் சகல கல்விக் கழக ஆசிரியர்களும் ஞாயிற்றுக் கிழமை மு. ப. 10-00 மணிக்கு முன்னதாக கல்விக்கழகப் பணிமனைக்கு தவறாது வருகை தரும்படி கேட்கப் பட்டுள்ளனர்.

## அறிஞர் கௌரவிப்பு

(வடமராட்சி)

தென்புலோலியூரில் அறிஞர்கள் கௌரவிப்பு விழா ஒன்று எதிர்வரும் 14ஆம் திகதி உபயகதிர்காமம் சனசமூக நிலையத்தில் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

அவ்வூர் அறிஞர்களான கந்த முருகேசனார், கார்த்திகேசு, பொன். சின்னத்துரை ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். தொடர்ந்து பட்டிமன்றம், கவியரங்கு, கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (யோ)

## கிறிஸ்மஸ் கானங்கள்

(தொல்புரம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தினர் நத்தார், புதுவருட பண்டிகை காலத்தை முன்னிட்டு ''கிறிஸ்மஸ் கானங்கள்'' என்னும்ஒலிப்பதிவுநாடாவை வெளியிட்டுள்ளனர்.

ஒரு மணிநேர ஒலிப்பதிவு நாடாவான இதன் பாடல்களுக்கான இசையமைப்

---

## 31-ம்நாள் நினைவஞ்சலி

அமரர்

**மாணிக்கம் தேவானந்தன் (குஞ்சர்)**

| மண்ணுலகில்: | விண்ணுலகில்: |
|---|---|
| **5-5-1950** | **2-12-1993** |

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுத்துறைத் தலைவரும், சமய சமூகத் தொண்டருமான அமரர் மா. தேவானந்தன் அவர்களின் திடீர் மறைவின் 31ஆம் நாளாகிய இன்று அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

| | |
|---|---|
| | அனைத்து விளையாட்டு வீரர்கள், |
| மத்தியசந்தை, | நண்பர்கள் சார்பில் |
| தொல்புரம். | **கி. மகேந்திரம்** |

(7104)

---

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கந்தையா

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் லோவர் வீதி பதுளையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா 28-11-93-ல் காலமானார். இவர் காலஞ்சென்ற கனகசவுந்தரத்தின் கணவரும், கனகேஸ்வரி அரிதாஸ், குமாரானந்ததாஸ் (பதுளை), காலஞ்சென்ற கிருஸ்ணதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தியாகராஜா, புஷ்பராணி, தனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவகௌரி, சிவகுமார், சிவநேசன், சிவமனோகரி, சிவரஞ்சினி, அனுசியா, அகிலன், தர்ஷினி, லதீஸ்குமார் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை (ஆசிரியர்), சவுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். இதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| வட்டுமேற்கு, | தகவல்: |
| சூரியகலா வீதி, | தியாகராஜா |
| வட்டுக்கோட்டை. | (மருமகன்) |

(7108)

### திரு. சின்னத்தம்பி செல்லையா

கேணியடி வீதி, மீசாலை மேற்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் சி. செல்லையா சிவபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற பொன்னம்மா அவர்களின் அன்புக்கணவரும், நீலாம்பிகை, மகேஸ்வரி (மகளிர் மகாவித்தியாலயம் சாவகச்சேரி), சண்முகசிங்கம் (நிதி உதவியாளர், தென்மராட்சிக் கல்விக் கோட்டம்), கருணாகரன் (வரணி இயற்றாலை அ. மி. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு. நா. கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய கிராம சேவகர்), இந்துமதி, சறோஜினிதேவி ஆகி

### 03. பயிற்சியாளர் தேவை

வடிகலன், கொதிகலன், மின்பிறப்பாக்கி பயிற்சியாளர்கள் தேவை. க. பொ. த. உயர்தர வகுப்பில் விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்தவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

### 04. போத்தல் சேகரிப்பாளர் தேவை

போத்தல் சேகரிப்பில் ஈடுபடக்கூடியவர்கள் தேவை. சம்பளம் பேசி தீர்க்கப்படும். தற்பொழுது இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எம்மிடம் பதிவு செய்து, தாம் சேகரிக்கும் அனைத்து போத்தலையும் நியாயமான விலைக்கு விற்பனை செய்யலாம்.

### 05. முந்திரிகை உற்பத்தியாளருக்கு

யாழ் மாவட்டத்தில் முந்திரிகை செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களை எமது கொத்தணியில் பதிவு செய்து கொள்ளவும். இது உற்பத்தியை கொள்வனவுசெய்வதற்கும், உற்பத்தியாளரின் தேவைகளை நிறைவேற்றவும் உதவும்.

### 06. பனம்பொருள் உற்பத்தியாளருக்கு

பனம் பொருள்களை உற்பத்தி செய்யும் வடமராட்சி மகளிர் தமக்கு அண்மையில் உள்ள பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தில் தம்மை பதிவு செய்து கொள்ளவும்.

பொது முகாமையாளர்

திக்கம், — பனை தென்னை வள அபிவிருத்தி
அல்வாய். — கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி.

(5868)

## பிறமொழி ஆசிரியர் தேவை

ஸ்பானிஷ், பிரெஞ்சு, ஜேர்மன், ருஷ்யன், ஜப்பான் போன்ற சர்வதேச மொழிகளைத் தமிழ் மூலம் கற்பிக்க அனுபவசாலிகள் தேவை. தகைமைச் சான்றிதழ்களுடன் 7-01-94இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி
**விளம்பர இலக்கம் - 305**
ஈழநாதம், யாழ்ப்பாணம்.

(7193)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

(சி-8264) செயலாளர்

## 52-ம் நாள் நினைவஞ்சலி



வீர ஓவியம்:
28-11-1963

வீர காவியம்:
11-11-1993

11-11-93 அன்று பூநகரி தவளைப் பாய்ச்சலின்போது வீரகாவியமாகிய

### லெப். கேணல் குணா
**(சுந்தரம் விஜயராசா)**
(தென்மராட்சிக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர்)

பூநகரி மண்மீது புல்லர் படையோட
மான மறத் தமிழர் படை மண்மீட்டபோது
தேனமுதச் செந்தமிழர் திருவாகி நின்று
கான மிசைத்த குயில் கண் மலர்ந்த தம்மா.

நாட்டுக்காய் உயிரீந்த
நல்லவர்கள் வேங்கைக்
கூட்டத்திலே எங்கள்
குணா இன்று விதையானான்
வீட்டுக் கொருவீரன்
வேங்கையருடன் சேர்ந்து
ஒட்டுவோம் எதிரிகளை
ஒளிபெறவே அவனிதயம்.

01-01-1994 (இன்று) எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் சக போராளிகளையும், உற்றார், உறவினர்களையும் நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கல்வயல், — அப்பா, அம்மா, சகோதரர்,
சாவகச்சேரி. — மைத்துனர், உற்றார், உறவினர்,
(7060) — நண்பர்கள்.

களுக்கான இசையமைப்பினை எம் யேசுதாசன் அவர்கள் அமைத்துள்ளார்

(41)

### நேசையா காலமானார்

பிரபலமான காந்தியவாதியும் சிறந்த கல்விமான்களில் ஒருவருமான பேராசிரியர் கு. நேசையா தமது 93 வயதில் நேற்று முன்தினம் சுண்டிக்குளியிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார்

தமிழர்களின் தனிநாட்டுக்கான போராட்டத்திற்கு ஆதரவு காட்டிவந்த அன்னார் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் உறுப்பினர்களில் ஒருவருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது

### சபை ஒத்திவைப்பு
(டில்லி)

இந்திய பாராளுமன்றத்தின் இரு அவைகளினதும் கூட்டத் தொடர் நேற்று முன்தினம் மறுதிகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஒய்வு**

இன்று பதவி ஏற்கிறார் பூநகரி தோல்வியை பொறுப்பேற்று சிசில் வைத்தியரட்ன பதவி விலக முன்வந்தமை தெரிந்ததே.

### தவறிவிட்டது

குமாரசாமி நேசகுமாரியின் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாச் சான்றிதழ் யாழ்ப்பாணத்தில் இருந்து நல்லூர் செம்மணி வீதி வழியாக நுணாவிலுக்கு செல்லும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7111)

கிராம சேவகர்), இந்துமதி, சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், முரளி, சுஜன், வினோபாபு, சத்தியபாபு, பிரியா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01. 01. 94) அவரது இல்லத்தில் நண்பகல் 12. 00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
நா. கணபதிப்பிள்ளை
(மருமகன்)

(7110)

## கதிரவேலு அபிமன்னன்
**(சின்னமணி)**

புங்குடுதீவு 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரவேலு அபிமன்னன் (சின்னமணி) 18-12-93 இல் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-12-93 இல் அரியாலை சிந்துப்பாத் மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்
அ. லீலாவதி
(மனைவி)

தற்போதைய முகவரி;
சு. பூவிலிங்கம்,
இல. 71 கண்ணாபுரம்,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (7101)

## சி. கிருஷ்ணபிள்ளை J.P
(சமாதான நீதவான்)

சமாதான நீதவான் திரு.சி. கிருஷ்ணபிள்ளை அவர்கள் (31-12-93) நேற்றுக் காலை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை 4 மணியளவில் சாவகச்சேரிகண்ணாடிப்பிட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கி. இராஜவரோதயம்
(மகன்)

(7107)